**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR</u>**

Case No.STC.10/2021
Complainant side witness.02

| | |
|---|---|
| பெயர் : ராமமூர்த்தி | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of February 2024.

<u>05.02.2024</u>

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கமிஷன் கடை வைத்துள்ளேன். எனது பக்க சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கறிஞர் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் இல்லை நான் தான் கூறினேன். நான் B.A. வரலாறு படித்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் எனது வயது 24 என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் 2005 யிலிருந்து 2007 வரை இராமநாதபுரம் நகராட்சி சேர்மனாக பதவி வகித்தேன். நானும், எதிரி பிரான்சிஸ்ஜோசப் மற்றும் புகார்தாரர் மோகன்தாஸ் ஆகியோர் ஒன்றாகத்தான் மிளகாய் கமிஷன் மண்டி வைத்து நடத்தி வந்தோம். 1993 ம் வருடத்திலிருந்தே கமிஷன் மண்டி நடத்தி வருகிறோம்.

2) நான் சேர்மனாக பதவியில் இருக்கும்போது நானும், எனது மகனும் தொழிலை பார்த்து வந்தோம். RSR மிளகாய் கமிஷன் மண்டி எனது கமிஷன் மண்டியின்

பெயர் ஆகும். புகார்தாரர் மோகன்தாஸ் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறாரா என்றால் இல்லை வேண்டும் நபர்களுக்கு கைமாற்றாக பணம் கொடுப்பார். புகார்தாரர் மீது எதிரி கந்துவட்டி வழக்கை இராமநாதபுரம் கோட்டாட்சியரிடம் மனு அளித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3) 20.11.2019 ம் தேதி புகார்தாரர் வீட்டில் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தார். எதிரி நான் நடத்திவரும் செல்வம் பிரஷ்சில் வைத்து புகார்தாரரிடம் காசோலை கொடுத்தார். எத்தனை காசோலை கொடுத்தார் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை ஆனால் காசோலை கொடுத்தார். காசோலை நிரப்பி கொடுக்கப்பட்டதா அல்லது நிரப்பாமல் கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு அதுபற்றி தற்போது ஞாபகம் இல்லை. எதிரியின் கடை லாபத்தில் தான் இயங்கி வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி யாரிடமும் கடன் வாங்கமாட்டார் என்றால் நான் தான் புகார்தாரரிடமிருந்து எதிரிக்கு பணம் கடனாக வாங்கி கொடுத்தேன். எதிரி என்னிடம் பணம் கேட்டாரா அல்லது புகார்தாரிடம் பணம் கேட்டாரா என்றால் எதிரி என்னிடம் மோகன்தாஸ்யிடம் பணம் வாங்கி தரக்கேட்டார்.

4) புகார்தாரர் எந்தெந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எதிரி எந்த வங்கி காசோலை கொடுத்தார் என்றால் ICICI வங்கி காசோலை கொடுத்தார் காசோலை எண் தெரியாது. எதிரி வியாபாரம் நல்ல முறையில் செய்து லாபம் ஈட்டு வந்ததால் யாரிடமும் கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் மோகன்தாஸ் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.